தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 விடை 15 (29 - 5 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 19 | பகுதி 26

★ தமிழினத்தைப் பிளவுப்படுத்துகிற எந்தக் கொள்கைக்கும், தமிழர்கள் ஆதரவு தரக் கூடாது !

★ எந்தத் தனிப்பட்ட கட்சிக் கொள்கையை விடவும் இனமானக் கொள்கை பெரிது.

★ எந்த அரசியல், பொருளியல் ஊதியத்திற்காகவும் இன மானத்தை இழந்துவிட வேண்டா.

★ இல்லெனில் அடுத்த நூற்றாண்டில் தமிழினத்தையே அழித்து விடுவார்கள் !

தமிழினத்திற்கு இக்காலம் வரலாற்றில் மிக நெருக்கடியான ஒரு காலம். களப்பிரர்களின் ஆட்சிக் காலத்தை விடவும் இக்கால கட்டம் வரலாற்றுத் தாக்கம் நிறைந்தது என்பதை நடுநிலையாகவும் ஆழமாகவும் சிந்திக்கின்ற எந்தப் பொது நிலை உணர்வுள்ள ஒருவரும் நன்கு உணர முடியும். அழியப் போகின்ற ஓர் இனத்துக்குத்தான் இத்தகைய அகப்புறத் தாக்கங்கள் நேரும். அத்தகைய தாக்கங்களுள் முகாமையான சிலவற்றை நாம் வெளிப்படையாகப் பார்க்கவும்! விரைந்து தீர்க்கவும் முயலவில்லையானால், இவ்வினமே அடுத்த நூற்றாண்டிற்குள் கட்டாயம் அழிந்து போகுமென்பது கல்லின்மேல் செதுக்கி வைத்துக் கொள்ள வேண்டிய உறுதி. உறுதி, உறுதி!

முதலில், வேறு எந்தக் காலத்தையும் விட இப்பொழுது சாதி வெறி பரந்துபட்டு வளர்ந்து வருகிறது. சாதிகளின் இருப்பைத் தோண்டிப் பார்த்த, அல்லது கழுவிப் பார்த்து மதிப்பிடுகின்ற அகப்புற நிலைகள் இக்காலம் மிகுந்து காணப்படுகின்றன. இன்னும் தெளிவாகச் சொன்னால் சாதியொழிப்புக்காகவே தம் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்ட பெரியார் காலத்தை விட, காந்தியார் காலத்தை விட, சாதியுணர்வு இப்பொழுது தலைவிரித்து ஆடத் தொடங்கியுள்ளது. இக்கொடிய உணர்வை எந்த வகையில் அல்லது எந்த நயன்மையில் (நியாயத்தில்) தக்க வைத்துக் கொண்டாலும் அல்லது மெருகு பூசி முலாம் போட்டுப் பளபளக்க வைத்தாலும் அந்நிலை இந்தத் தமிழினத்திற்கு மேலும் மேலும் சிதர்வுகளையும் சிதைவுகளையுமே தான் உண்டாக்குமேயன்றித் துளியும் நன்மையை விளைவிக்காது; கட்டாயம் விளைவிக்காது.

அடுத்தது, மதமென்னும் பெயரால் இங்கு ஆளுக்கொரு சமயத்தை உருவாக்கிக் கொண்டு, புதுப்புது மத, கடவுள் கோட்பாட்டை அறிமுகப்படுத்திக் கொண்டு, மக்களைக் கட்சி பிரிக்கின்ற- அவர்களை மூட, ஆரவாரச் சேற்றுப் புதையுள் அழுத்துகின்ற தீய ஏமாற்றுச் செயல்கள். இத்தகைய புதுக் கடவுள் கொள்கைகள் அனைத்தும் பார்ப்பனீயத்திற்கு ஆக்கமாகவே, அதை எவ்வகையிலேனும் கட்டிக் காக்கின்ற உரமாகவே அதற்கு வேலியாகவே அமைகின்ற தன்னழிவுச் செயல்கள். இவற்றாலும் தமிழினம் நிலைகுலைந்து சிதறுண்டு அழியவே செய்யும் என்பது மறுக்க முடியாத உறுதியாகும்!! இங்கு இன்னொன்றையும் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இறைக் கொள்கையோ இறை மறுப்புக் கொள்கையோ நமக்கு முகாமையானதன்று. எந்தக் கொள்கையானாலும், இவ்விரு கொள்கைகள் பற்றிய வீணான தருக்கங்களிலும் தமிழர்கள் இரு கூறாகப் பிரிந்து நின்று, ஒன்றையொன்று எதிர்க்கின்ற முயற்சிகளிலேயே ஈடுபட்டு இயங்கி இத்தலைமுறைக்கு மிகவும் தேவையான இனமானக் கொள்கையை இழந்து விடக் கூடாது. அஃது அறியாமையிலும் அறியாமை. இறைவன் இருக்கின்றானா இல்லையா என்னும் போராட்டத்தில் வேறுபட்டுக் கிடப்பதைவிட ஒருவன் தமிழனாக இருக்கின்றானா இல்லையா என்னும் தெளிவில், ஒன்றுபட்டிருப்பதே ஒட்டுமொத்தமான இன முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணைசெய்ய உதவுவது என்பதை எவரும் மறந்து விட வேண்டாம்.

இனி, தமிழ்மொழி முன்னேற்றத்தில் அனைவரும் ஒன்றாகவே சிந்திக்காமல், ஆளுக்கொரு மூலையில், மொழி அமைப்பைச் சிதைப்பது எழுத்து முன்னேற்றத்தைவிட மொழி முன்னேற்

(4ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

★ ஏழாவது முறையாக அணிசேரா நாடுகளின் அவல நிலைமை

- மனோரிசி.

உலகமே மலைக்கக் கூடிய அளவுக்கு நூற்றியொரு நாடுகளின் தலைவர்கள் தில்லியில் குழுமினார்கள் என்றும் யாருமே செய்ய முடியாத செயலைச் செயற்படுத்தி விட்டார்களென்றும் இந்தி(ரா)யா பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏழாவது கூட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டிற்கு வருகை தந்தத் தலைவர்களை வரவேற்கவும், உயிருக்குப் பாதுகாப்புத் தரவும் தில்லியே வேறுபடுத்தப்பட்டது. இந்தியாவில் இயல்பாக நடந்துவரும் மக்கள் படுகொலைகளை வெளியிடும் இதழ்கள் மற்றவர்கள் கண்களில் படாமலிருக்க விரைவான முயற்சிகள் நடந்தன. இதுவரை ஆறு மாநாடுகள் நடந்து முடிந்து விட்டன.

கூட்டுச் சேரா மாநாட்டின் வரலாற்றுப் பின்னணி :

பிரிட்டானியக் குடியேற்ற மேலாளுமையில் இருந்து விடுபட்ட நாடுகள் 'காமன வெல்த் மாநாடு' என்ற ஓர் அமைப்பைக் கொண்டுள்ளன. அதைப் போலவே, மூன்றும் உலக நாடுகளின் கூட்டமைபபான இந்த மாநாடு 1961-இல் யூகோசுலேவியாவின் பெல்கிரேடில் முதல் முறையாகக் கூடியது. அப்போது 25 நாடுகள் பங்கேற்றன. இரண்டாம உலகப் போருக்கு பின் சீனா, உருசியா, அமெரிக்கா ஆகிய வல்லரசுகளின் போக்கினால் அச்சமடைந்த இந்தியா, யூகோசுலேவியா, எகிப்து ஆகிய மூன்று நாடுகளின் தலைவர்கள் கூட்டிய மாநாடு அது. மூன்றும் உலக நாடுகளின் பின்தங்கிய நிலையினை வல்லரசுகள் வாய்ப்பாக்கிக் கொள்ளாமலிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள்.— சுருக்கமாக வல்லரசுகளின் படைக்கல வலிமைக்கும், பண உதவிக்கும் அடிமைப்பட்டும் பின்தங்கிய நாடுகள் நசுக்கப்பட்டு விடக்கூடாது என்பது சரியான காரணம் தான். ஆனால் தில்லியில் நடந்த 7-ஆவது மாநாடு வரை இந்த இயக்கத்தின் கதை என்ன ? குறிப்பாகப் புதுமுறைப படைக்கலங்களுடனும் உலக வைப்பகம் மூலம் கடனாகத் கொடுதத பணத்திற்குக் கோடிக் கணக்கில் வட்டியைத் திருப்பிக் கொடு என்ற மிரட்டிலுடனும் பொருளியல் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தும் அமெரிக்காவிற்தும் அயல அண்டை நாடுகளில் திறமையாக ஊடுருவித் தன் நாட்டின் பரப்பளவைப பெருக்கிக் கொள்ளும் உருசியாவிற்கும் பரிவு காட்டி, அவற்றின் எண்ணங்களை வெளிப்படுத்தவே கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு பயன்பட்டு வருகிறது,

உருசியா - எதிர் - அமெரிக்கா :

ஆறுவது கூட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டிற்குத் தலைமை வகித்த கியூபாவின் குடியரசுத் தலைவர் பிடில் காசிட்ரோ வெளிப்படையான உருசிய ஆதரவாளர். உருசியாவின் வன்பிடிப்புக்குள்ளிருக்கும் ஆப்கானிசுதானில் உருசிய படைகளுக்கு உதவியாக கியூபாவின் படைகள் விடுதலை இயக்கத்தை நசுக்கவும வியத்நாம் படையின் ஒரு பிரிவு காபூல் வானூர்தி நிலையத்தைக் காக்கவும், எண்ணெய வயல்களைச் செய்வதில் பல்கோரியப் படைகளும் ஈடுபட்டு வருகின்றன. கியூபா தம் அண்டை நாடான அங்கோலாவில் இன்றும் ஊடுருவிக் கொண்டிருப்பது அமெரிக்க முற்றுமைக்குப் பெரும் எரிச்சல். அமெரிக்கா தமக்கு ஆகாத நாடுகள் மேல் சுமத்தும் பொருளியல் தடை கியூபாவின் மீதும் 22 ஆண்டுகளாக இருக்கிறது. எனவே கியூபா தம் நாட்டின் அரசியல் சார்புத் தன்மையை வைத்து .மாநாட்டின் முதல் கூட்டத்திலேயே அமெரிக்காவின் போக்கினை வன்மையாகக் கண்டித்தது. கூட்டுச் சேரா நாடுகள் உருசியச் சார்புடையதாயிருக்க வேண்டும் என விரும்பும் நாடுகளில் கியூபாவும் ஒன்று.

இதனால் அமெரிக்கா கூட்டுச் சேரா மாநாட்டைச் சீர்குலைக்க செய்ய வேண்டும் என்று பல வகையில் முயல்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், இந்தோனிசியா போன்ற நாடுகள் அமெரிக்காவின் படைக்கலக் குவிப்பையும், ''டிகோ கார்சியா'' தீவில் படைத் தளங்கள் அமைத்துள்ளதையும் மறைக்கப் பார்த்தன. இந்த அமெரிக்கச் சார்பு நாடுகள் ஐ. எப். என்னும் பன்னாட்டுப் பணக்குவையக் கடன், உலக வங்கிக் கடன் போன்றவற்றால் அரசியல் நோக்குடன் தலையிட்டுப் பின் தங்கிய நாடுகளை அடிமைப்படுத்தும் அமெரிக்காவின் மேலீட்டைக் கண்டு கொள்ளாமல் சப்பை கட்டின. இசரேலுக்குக் கருவிகள் தாராளமாகக் கொடுத்துப் பாலத்தீன விடுதலைப் படையினரை நாடில்லாதவர்களாக்கி, அரபு நாடுகளின் நிலையான எதிரியை வலுப்படுத்தும் அமெரிக்க முற்றுமையின் பேராளராகவே அவை செயல்பட்டன.

யாருடன் யார் கூட்டு என்ற போட்டியில் கூட்டுச் சேரா மாநாடு மாபெரும் வெற்றி என்று இந்திராவும், மாநாட்டின் மூலம் அதிகச் சலுகைகள் பெற்ற இதழ்களும், வலுவாக விளம்பரம் செய்தன. உண்மை நிலையில் கூட்டுச் சேரா மாநாடு நடக்கவில்லை. உருசியாவிற்கும் அமெரிக்காவிற்தும் வாலபிடித்து நல்ல பெயர் வாங்கிக் கொள்ளும் முயற்சியில் இந்த நாடுகள் போட்டியிட்டன. இந்த மாநாட்டின் தலைவராக்கப்பட்ட இந்திராவின் முதல் நாள் உரை ஆவணமாக்கப் பட்டது.

முதல் நாள் உரையின் சாரம் :

- நியூட்ரான் அணுக்கருவிப் பரவலை வல்லரசுகள தடைசெய்ய வேண்டும்.
- புதிய உலகப் பொருளியல்' அமைப்பினை (New International Economic Order) ஏற்படுத்த வேண்டும். அதற்கான கடன் பெறப் பணக்கார நாடுகளின் அருள் என்றும் வேண்டும்!'
- பொருளியலிலும் தொழில் நுட்பத்திலும் மூன்றும் உலக நாடுகள் முன்னேற்ற மடையப் பணக்கார நாடுகளையே நம்பி நிற்கிறோம்,

இந்த மூன்று முகாமையான கோரிக்கைகளும், அமெரிக்க, உருசிய நாடுகளின் அச்சுறுத்தலுக்தும் அவற்றின் தந்நலமான ஆதாயத் திட்டங்களுக்கும் பணிந்து யோட்ட பரிவு வேட்புகளே, இதன் மூலம் மூன்றும் உலக நாடுகள் தங்களுடைய தனித்தன்மையை இழந்துவிட்டன. இதன் மூலம், இந்த மாநாடு வல்லரசுகளின் அருளில்லாமல் எங்களால் எதையும் செய்ய முடியாது எனத் தீர்மானமியற்றிவிட்டன.

சொல்லப்பட்டது உலக அமைதி !

- உலக அமைதிக்கு நாடுகளிடையே போர் ஏதும் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும்.
- ★ எந்த வல்லரசும் இன்னொரு நாட்டின் ஆட்சியில் தலையிட அல்லது படைவலிமையால் கையகப்படுத்தக் கூடாது.

இவ்வாறு கூட்டுச் சேரா மாநாடு தீர்மானத்தின் மூலம் அமைதிக்கான குரலாகக் கொடுத்தது. ஆனால் இது மிகவும் வலுமெலிந்த தரல் தான்.

நடந்து கொண்டிருப்பது :

வல்லரசுகளிடையே படைக்கலப் போட்டியும், மேலீட்டு வெறியும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே யிருக்கின்றன. அமெரிக்கத் தலைவர் ரீகனின் அரசு நியூட்ரான் குண்டுகளுக்காகச் செலவழிப்பதில் ஒரு டாலர் கூடக் குறைத்துக் கொள்ள அணியமாக இல்லை பாலத்தீனம், நிக்காரகுவா, எல்சால்வடார், நமீபியா ஆகிய நாட்டு மக்களின் விடுதலை உணர்வினை நசுக்க அமெரிக்கா தொடர்ந்து படைக்கல உதவியினை அளிக்கிறது.

பாலத்தீனியரின் விடுதலைப் போர்

தங்களுக்கென நாடு ஒன்று இல்லாமல் அதன் மக்கள் பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள் இந்தக் கூட்டுச் சேரா மாநாட்டில் பாலத்தீனியரின் சிக்கலும் எழுப்பட்டது. ஆனால் அமெரிக்காவோ அதன் எதிரியான இசரேலுக்குக் கருவிகளை அதிக அளவில் வழங்கி எண்ணெய் வள நாடுகளை மறைமுகமாக அச்சுறுத்தி வருகிறது. இசரேல் அடிக்கடி தன் படையின் வலிமையை ஆய்ந்து கொள்ளவும் பாலத்தீனியருக்கு ஆதரவு தரும் அரபு நாடுகளை அச்சுறுத்தவும் ஏதாவது செய்வதே என்பது வழக்கமாகி விட்டது. இராக்கின் எல்லைக்குள் நுழைந்து அது.கட்டி வந்த அணு உலைக்கதிர்களைச் சில மணி நேரத்தில் தாக்கி அழித்துவிட்ட இசரேலை ஒன்றிய நாட்டு அவையிலிருந்து வெளியேற்ற முடியவில்லை. அமெரிக்கா 'மறுப்பு' அதிகாரத்தைப் பயன்படுத்திவிட்டது.

இரான் - இராக் போர் !

வெகு நாட்களாக நடைபெற்று வரும் இந்தப் போர் உடனடியாக நிறுத்தப்படக் கூட்டுச் சேரா மாநாடு எழுப்பிய கோரிக்கை ஒன்றுக்கும் பயனில்லை. மேலும் இந்த இரு நாடுகளுமே கூட்டுச் சேரா நாடுகளின் உறுப்பினர்கள். கூட்டுச் சேரா மாநாட்டில் கலந்து கொள்வதை அந்த நாடுகளை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. இராக்கின் குடியரசுத் தலைவர் இந்தியாவில் இரான் மாணவர்கள் அதிகம் இருப்பதால் உயிருக்கு ஊறு ஏற்பட்டுவிடும் என்று கலந்து கொள்ளவில்லை.

போலந்தில் தொழிற்கழக அடக்குமுறை ;

உருசியா, ஆப்கானிசுதானில் மேலீடு செலுத்துவது மட்டுமல்லாமல், போலந்திலும் அதிகாரத்திலிருக்கிறது, தொழிலாளர்களின் உரிமைகளைப் பரப்பி வரும உருசியா போலந்தின் பெரிய தொழிலாளர் இயக்கதைதை (Solidarity Movement) அடியோடு ஒழிக்கத் தடைசட்டம் போடச் செய்துள்ளது. உலக அரங்கிலுள்ள பல்வேறு அரசியல் அவலங்களைக் கண்டிப்பதில் இந்தக் கூட்டுச் சேரா நாடுகள் துணிவு காட்டவில்லை.

அணுக்கருவிப் போட்டி :

மேற்குச் செர்மனியில் நியூட்ரான் கருவிகளை ஆதரிக்கும் ரீகனுக்கு ஆதரவான ஆளும் கட்சி வெற்றி பெற்றுள்ள சமயத்தில் கூட்டுச் சேரா மாநாட்டில் அதிக இடங்களில் குறை கூறப்பட்டுள்ளதால் ரீகன் அரசு கொஞ்சம் எரிச்சல் அடைந்துள்ளது. ஆறுவது மாநாட்டிலிருந்தது போலத் தங்களுக்கு வாய்ப்பான வாசகங்கள் இல்லை என உருசியா சிறிது ஏமாற்றம் அடைந்தாலும் இந்தக் கூட்டுச் சேரா மாநாட்டின் முடிவுகள் தீர்மானங்கள் இந்த வல்லரசுகளின் மேலீட்டுப் போக்கினை மாற்றப் போவதில்லை. காரணம் இந்தத் தீர்மானங்கள் எல்லாம் சட்ட அளவோடு தான். இவற்றைச் செயல்படுத்துவதற்கான உண்மையான ஆக்க வழியான ஒற்றுமை அல்லது புரிந்து கொள்ளுதல் இந்த நாடுகளுக்கிடையே கொஞ்சம் கூட இல்லை.

மூன்றும் உலக நாடுகள் சார்பாக இந்தியா இந்த மாநாட்டில் என்ன செயலாக்கியது?

தனித்தன்மையுடைய முடிவுகளோ, வரிச் சுமையால் அடிமைப்பட்டிருக்கும் ஏழை நாடுகளின் எதிர்ப்புக் குரலோ அங்கு எதிரொலிக்கவில்லை. மாறாக, கூலிக்கு வால் பிடிக்கும். முதுகெலும்பற்ற நாடுகளின் முணுமுணுப்புகள் தாம் இதழ்களாலும், விளம்பரக் கருவிகளாலும் பெரிதாக்கப்பட்டுவிட்டன. உருப்படியாக இந்த மாநாடு எதையும் செய்துவிடவில்லை.

இந்தியாவுக்கு இந்த மாநாட்டின் மூலம் மிகவும் பெருமை கிடைத்து விட்டதாகவும் இந்திராவை விட்டால் வேறு யாரும் சிறப்பாகச் செய்திருக்க முடியாது என்றும் 'தம்பட்டம்' அடித்துக் கொள்கின்றனர். உண்மையில், இதற்கு முன் நடந்த மாநாடுகளையும் இந்தியாவைவிடப் பின் தங்கிய நாடுகள் நடத்திக் காட்டின. எனவே, இதனை யாரும் மிகப் பெரிய செயல் என்று எண்ணிவிட வேண்டாம். 101 நாட்டு அரசியல் தலைவர்களின் உயிரைப் பாதுகாத்து, ஊறுபாடின்லாமல் முடித்துவிட்டார்களாம். வெட்கம் கெட்ட இந்திய அரசியலார்க்கு அதைச் சொல்ல, துளியும் தகுதி கிடையாது. அசாமில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான 'மாந்த உயிர்களுக்குப் பாதுகாப்பளிக்க வகையில்லாத அரசுக்கு மற்ற செயல்களைப் பற்றிப் பேச என்ன முறை இருக்கிறது? மாநாடு நடக்கும் சமயத்தில், 'சண்டே,' 'இந்தியா டுடே' ஆகிய இதழ்கள் வெளியிட்ட அசாம் படுகொலைகள் பற்றிய இதழ்கள் வெளிவராமலிருக்க இந்திராவின் அதிகார வலிமை எத்தனைத் தில்லுமல்லுகளைச் செய்தது! இந்திராவின் ஆட்சித் திறமைக்கு அசாமும், அகாலிகளும் போதும்.

மாந்தர் உரிமைகள் (Haman Rishts)

போரினால் அழியக் கூடிய மாந்தர் உயிர்களைப் பற்றிப் பேசிய நாடுகள் தங்கள் நாட்டினில் மறுக்கப்பட்டு வரும் மாந்தர் உரிமைகளைப் பற்றிப் பேச அணியமாயில்லை. மாந்தனின் அடிப்படை உரிமைகளையும் அதற்கான போராட்டங்களையும் இதில் கலந்துகொண்ட எந்த நாடுமே பெரிதாக நினைக்கவில்லை. ஏனென்றால், தலைவர்களின் உயிருக்குத்தான் 'குளிர் தபன' ஏந்துடன் ஏராளமான பாதுகாப்பு இருக்கிறதே...உலக வாணிகத்தைப் பற்றியும், பொருளியல் நல்லுறவுகளைக் குறித்தும் உரையாடினார்கள். இவை எல்லாம்

(5-ஆம் பக்கம் பார்க்கவும்)

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 29-5-83 இதழ் எண்: 19 — பகுதி 26

பொதுமக்கள் பணத்தை இப்படிப் பாழடிக்கலாமா?

கிருட்டிணா ஆற்று நீர்த்திட்டத்திற்கான முன்பணம் உருபா 30 கோடியை ஆந்திர முதலமைச்சரிடம் தமிழக அரசு தருவதற்கு ஒரு விழாவே அண்மையில் நடந்தது. தேவையில்லாத ஆரவாரமான விளம்பர விழா இது. இதற்கென ஏறத்தாழ ஒருகோடி உருபாவைத் தமிழக அரசு பாழடித்திருக்கிறது. வானூர்தி நிலையத்திலிருந்து இந்திராகாந்தியை வரவேற்பதற்கு, நேரு விளையாட்டரங்கம் வரை 102 வரவேற்பு வளைவுகள் கட்டப்பட்டன. ஒரு வளைவுக்கு ஏறத்தாழ 5000 உருபாவைச் செலவழித்திருக்கிறார்கள். நேரு திடல் மட்டும் பல ஆயிரக்கணக்கான உருபாவில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்திரா அம்மையார் வந்து பேசிச் செல்வதற்கான மேடை போடுவதற்காக உருபா மூவாயிரம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. வளைவுகளில் எல்லாம் பெரிய பெரிய வெட்டுப்பலகைப் படங்கள் வைக்கப்பட்டன. 'ஒருநாள் கூத்திற்கு மீசையைச் சிரைத்த கதை' என்று கூறுவார்கள். இப்படிப்பட்ட கொடுமையான செலவுகளையெல்லாம் எப்படித் துணிந்து செய்கிறார்களோ, நமக்குப்புரியவில்லை. பொதுமக்கள் பணத்தைத் தன் அப்பன் வீட்டுப் பணமாக எண்ணித் தண்ணீர் பட்ட பாடாகச் செலவழித்திருக்கிறது தமிழக அரசு! இப்படியான நிலையில் நடந்துகொள்ள ஒன்றால் இவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். இல்லையென்றால் இவர்களுக்குப் பொதுமக்களைப் பற்றிய கவலை துளியும் இல்லாத கொடுமை நெஞ்சம் வாய்ந்திருக்க வேண்டும். வெளிப்படையாகத் தெரிந்த செலவு இவ்வளவு. இன்னும் தெரியாத செலவு எவ்வளவோ?

பொதுவாகவே தமிழ்நாடு இன்றுள்ள நிலையில் எவருக்கும் இந்தக் கொடுமையான எண்ணம் தோன்றவே தோன்றாது. மக்கள் தண்ணீர்த் தட்டுப்பாட்டுக் கொடுமையால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். மின்தட்டுப்பாட்டால் தொழில்களெல்லாம் நசித்துப் போய்க் கிடக்கின்றன. தொழிற்சாலைகளிலெல்லாம் பகுதி நேர வேலையே நடக்கிறது. பல சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. தொழிலாளர் குடும்பங்கள் அரைப்பட்டினியும் கால் பட்டினியுமாகத் தொல்லைப்பட்டுக் கொண்டுள்ளன. ஏழை மக்கள் போதிய கூலிகள் கிடைக்காமலும், உணவுப் பொருள்களின் எல்லைமீறிய விலையேற்றத்தாலும் துன்புற்றுக்கொண்டிருக்கின்றனர். நடுத்தரக் குடும்பங்களோ வாழ்வுக்காகப் போராடுகின்றன. உழவர்கள் போதிய மழையின்றி வானத்தை அண்ணாந்து பார்த்து உருகிக் கண்ணீரில் கரைகிறார்கள். இந்நிலையில் நாட்டில் கூத்துக்கும் கொம்மாளத்திற்கும் குறைச்சலில்லை.

சென்னைச் சுவர்கள் முழுவதும் சுவரொட்டிகள் மயந்தாம்! பிறந்தநாள் விழாக்கள், ஆரவார அரசியல் வேடிக்கைகள்! மதமென்னும் பெயரால் மூலைக்கு மூலை மாநாடுகள், ஊர்வலங்கள், கூத்தடிப்புகள்! கிழமைக்குப் பத்துப் புதுத்திரைப்படங்கள்! திரைப்படக் கூத்தர்களுக்கும் விளையாட்டுக் களியாட்டக்காரர்களுக்கும் பரிசளிப்புகள்! அட்டா! தமிழ்நாடு எவ்வளவு சீர்குலைந்து போய்விட்டது! குழுகாயக் கொடியவர்களும் அரசியல் கொள்ளையர்களும் மக்களை எவ்வளவு துன்புறுத்தலுக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கின்றனர். உண்மையும் உழைப்பும் எவ்வளவு நசுங்கிக் கிடக்கின்றன! ஊதாரித்தனங்களும் உன்மத்தங்களும் பொய்க் கொடிகளையும் புளுகுக் கூச்சல்களையும் போட்டுக்கொண்டு என்னமாக வீதிகளில் பெருமிதத்துடன் உலா வந்து கொண்டுள்ளன! எப்படி இவர்களெல்லாம் மக்கள் நலங்களை நாட முடியும்? இவர்களுக்குக் கண்கள் எப்படித் தெரியும்? காதுகள்தாம் எப்படிக் கேட்கும்? மனம் எந்த வகையில் சிந்திக்கும்? மூளையில்தான் என்ன வகையான எண்ண அலைகள் எழுந்து கிளரும்! ஒன்றுமே விளங்கவில்லையே! யார் இவர்களைக் கேட்பது? யார் இவர்களுக்கு உணர்த்துவது? யார் இவர்களைக் கண் விழிக்கச் செய்வது? அரச இயக்கத்தின அடித்தளத்திலிருந்து மேல்தளம் வரை இப்படியா? யாரை நொந்துகொள்வது!

ஏ! பாட்டாளிக் கூட்டமே! உழைப்பாளர் பெருமக்களே! உழவு செய்து உலகைக் காக்கும் நல்லுயிர்களே! உங்கள் சார்பில் யார் வந்து எப்பொழுது போராடப் போகிறார்களோ! உங்களுக்குத்தான் என்று விடியப் போகிறதோ? தெரியவில்லையே!

புதுச்சேரி கம்பன் விழாவில் தமிழ்ப் பகைவர் கீரன் மீது செருப்பு வீச்சு!

தமிழகத்தின் பல பகுதிகளிலும் பாடம் கற்பிக்கத் தமிழிளைஞர்கள் முன்வர வேண்டும்!

மே-15 புதுச்சேரித் தலைநகரில் ஆண்டுதோறும் மூன்று நாள் சிறப்புவிழாவாகக் கம்பன்விழா நடைபெறுவது வழக்கம். அதன்படி, இம்மாதம் 13, 14, 15 ஆகிய நாள்களில் அவ்விழா ஆரியப்பார்ப்பனர், ஆரிய அடிமைகள், ஆர்.எசு.எசு., காட்டிக் கொடுப்பான்களாகிய சில அரசியல் தொண்டர் அடிப்பொடிகள் ஆகியோர் ஒத்துழைப்புடன் பெருஞ்செலவு செய்யப்பெற்று ஆரவாரமாக நடைபெற்றது.

எந்த ஆண்டும் நடவாத, புதிய எதிர்ப்பு தமிழ்மானம் நிறைந்த பல்வேறு அரசியல், மற்றும் தமிழ் இயக்கச் சார்பினரால் நிகழ்த்தப் பெற்றது.

'கோயில் கருவறையில் தமிழ்மொழி வழியாக வழிபாடு நிகழ்த்தக்கூடாது; சமற்கிருதம் மட்டுமே அங்கு ஓதப்பெறுதல் வேண்டும். தமிழைக் கருவறைக்கு வெளியில் மட்டுமே ஓதலாம்" என்று சமயப் பேச்சாளர் கீரன் அண்மையில் மதுரையில் பேசிய பேச்சுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் நிகழ்த்தப் பெற்றது.

தமிழர்களின் சோற்றை உண்டு கொழுத்துத் திரியும் பார்ப்பனர் கீரன் அவர்கள், இவ்வாறு பேசியது புதுவைத் தமிழ் நெஞ்சங்களிடையே பெருத்த கொதிப்பை ஏற்படுத்தியது. பல்வேறு பெயர்களில் இயங்கும் தமிழ்க் கழகங்கள் யாவும், இந்த வாய்க்கொழுப்பான பேச்சுக்கு எதிர்ப்படி கொடுக்க எண்ணி விழாத் தொடக்கப் பொழுதிலேயே அமைதியாக அமர்ந்திருந்தனர். நேரம் வந்தது! கீரன் வாயைத் திறந்தார்! திடுதிப்பென விழா அரங்கின் பல பகுதிகளிலிருந்தும், 'தமிழ்ப் பகைவனே! கீரா! வாயடங்கு! தமிழர்களிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு அதன்பிறகு பேசு! தமிழைப் பழிக்கும் கொடியவனே! தமிழர்களின் சோற்றைத் தின்னும் ஆரியனே! புதுவை மேடையில் இனி உனக்கு இடமில்லை!' என்றவாறாக மிக உரக்க முழக்கமிட்டனர். துண்டறிக்கைகளை அரங்கில் பல பகுதிகளில் வீசியெறிந்தனர்.

அதுபோது, பொதுமக்களும் கொதித்தெழுந்து கீரனை எதிர்த்து முழக்கமிட்டனர். காவல் துறையினர் முதலில் மூவரையும், பின்னர் இருபத்தைந்து பேர்களையும் தளைப்படுத்திக் காவல் நிலையம் அழைத்து சென்றனர். இதற்குள் கீரனை நோக்கி அரங்கத்தில் செருப்புகள் வீசப்பெற்றன.

ஏறத்தாழ 28 பேர்கள் தளைப்படுத்தப் பெற்றபின் ஆர்ப்பாட்டம் வலுத்தெழுந்தது. மூலைமுடுக்கு எங்கும் கூச்சல், குழப்பம்!

காவலர், நிலைகண்டு அஞ்சி அனைவரையும் விடுதலை செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ் இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்களும், தமிழ் உணர்வு நிரம்பிய அரசியல் தொண்டர்களும் ஒருமித்துக் கலந்து வலிவு காட்டினர்.

விழா முடிந்து மகிழுந்தில் வெளிவந்த கீரனை நோக்கிச் செருப்புகள் புயல் மழை போல் சீறிப் பறந்தன! தப்பித்தோம் பிழைத்தோம் என்றவாறு கீரனை ஏற்றிவந்த மகிழுந்து, திமிறிப் பறந்தது. அங்குச் சற்றுநேரம் அவ்வண்டி நின்றிருந்தால் தமிழ்ப் பூசனை வேண்டாம் என்றவர்க்குக் கட்டாயம் செருப்புப் பூசனை நிகழ்ந்திருக்கும்! நல்லவேளை தப்பினார், கீரன்!

புதுவையில் தப்பிய கீரனுக்குத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பாடம் கற்பிக்கத் தமிழிளைஞர்கள் முனவரவேண்டும் என்று புதுவை உ.த.மு.க விரும்புகின்றது! தமிழகத் தமிழ் இளைஞர்கள் செய்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்!

— நம் செய்தியாசிரியர்! புதுச்சேரி

தெரியுமா செய்தி?

0 இப்புடவியில் இதுவரை 55,188,00,00,000 விண்மீன்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

0 ஆமை 152 ஆண்டுகள் வரையிலும் உயிர் வாழும்.

0 பனை மரங்களில் 1500 வகைகள் இருக்கின்றன.

(3-ஆம் பத்தித் தொடர்ச்சி)

தமிழ் இனத்திற்கு அந்தப் பாதுகாப்பு உண்டா?

எனவே தமிழ்க் குமுகாயத்தைக் காப்பாற்றத் தமிழர்களை, தமிழ்மொழியைக் காப்பாற்ற நாம் அனைவரும் கட்சிப் பாகுபாடு இன்றி ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

தனித்தமிழ்மொழி நிற்குமா, நிலைக்குமா என்ற கேள்விக்குறி தமிழகத்திலே எழுமானால்...... தமிழகத்திலே உள்ள இலக்கக்கணக்கான இளைஞர்களின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரும் அகாலிகளாக மாறி விடை சொல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

நன்றி, 'விடுதலை' (20-5-83)

தமிழினம் ஒடுக்கப்பட்டால் இளைஞர்கள் அகாலிகளாவர்!

அமைச்சர் காளிமுத்து எச்சரிக்கை

தமிழ் மொழிக்கு ஏதம் (ஆபத்து) ஏற்பட்டால் தமிழக இளைஞர்கள் அகாலிகளாக உருமாறி விடை சொல்லவேண்டிய நிலை ஏற்படும் என்று அமைச்சர் காளிமுத்து எச்சரிக்கை விடுத்தார்.

தமிழின முன்னேற்றத்திற்குத் தடையாக நின்று நம்மை அடக்க நினைக்கும் வல்லாண்மையாற்றல்களை (ஆதிக்கச்சக்திகளை) முறியடித்தாக வேண்டும்.

தமிழினத்திற்கு ஏதம் என்றால் நாம அனைவரும் ஒன்றுபட்டாக வேண்டும்.

மாற்றான் தோட்டத்து மல்லிகை கூட மணக்கும் என்றார் அண்ணா. ஆனால் இந்தப் பங்காளித் தோட்டத்து மல்லிகையிலேயே மணம் இல்லை என்பதை நாம் காண்கிறோம்.

இந்தப் போக்கு மாற வேண்டும். ஒரு தகவலை உங்களுக்கு வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். தமிழினத்தைப் பற்றி, தமிழர்களைப் பற்றி வெளிநாடுகளிலே எப்படிப்பட்ட தவறான கருத்துகள் பரவுகின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறேன்.

அமெரிக்காவிலே உள்ள "கோனலூலூ இசுட்டார் புல்லட்டின்" என்ற ஒரு தாளிகை அங்குள்ள இந்திய தூதர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமிழ்மக்களைப் பற்றிச் செய்தி வெளியிட வேண்டும், அவர்களைப் பற்றிய விளக்கங்களைத் தாருங்கள் என்று கேட்டு, அந்த இந்திய தூதர் அலுவலகம் தந்த விளக்கங்களை வெளியிட்டுள்ளது.

எப்படித் தெரியுமா?

'தமிழர்கள் என்பவர்கள் தென் இந்தியாவின் ஒரு கடைசி மூலையில் மலைவாழ் மக்களைப் போல வாழ்ந்து கொண்டிருக்கும் நாகரிகமில்லாத கூட்டம்; காட்டுமிராண்டிகளைப் போல வாழ்க்கை நடத்தும் அவர்கள் மாரி என்ற கடவுளைக் கும்பிடுவார்கள்!' என்று உலகுக்குத் தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட கருத்துகளை இந்திய தூதுவரகம் கொடுத்துள்ளது.

நம்மிடமிருந்து 18 கற்கள் தூரத்தில் உள்ள இலங்கையில் தமிழ் மக்கள் சிங்களவர்களால் தாக்கப்பட்டு இறந்து கொண்டு இருக்கின்றனர். அவர்களைப் பாதுகாக்க நம்மால் முடியவில்லை.

18 கற்கள் தூரத்திலே உள்ள நம்உடன் பிறந்தவர்களைக் காக்க 2000 கற்களுக்கு அப்பாலே உள்ள தில்லியால் தான் முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் இதுபற்றி அவர்கள் கவலைப்படுகிறார்களா?

தமிழர்கள் என்றால் எளிமையாக நினைக்கிறார்கள். ஆனால் உலகின் பல்வேறு பகுதிகளில் எந்த இனத்திற்கு ஏதம் என்றாலும் இந்திய வானூர்தி அங்கே போய் இறங்குகிறது. தாக்கப்பட்டவர்களை ஏற்றிக் கொண்டு பறந்து வருகிறது'.

(2-ஆம் பத்தி பார்க்க)

(...தல் பக்கத் தொடர்ச்சி)

...மே முதலில் தேவையானதும் இன்றியமையாதது ...ரும் என்னும் இயற்கைக் கோட்பாட்டை அனை...ரும் உணர்வது மிக மிக நல்லது. மொழியிருந்தால் ...ன் எழுத்து தேவையாகும்!" மொழியின் கட்டுக் ...காப்பை இழந்து விட்டு, எழுத்துகளை வைத்துக் ...காண்டு என்ன செய்வது? வெறும் எழுத்தே ...மொழியாகிவிடுமா என்பதை எண்ணிப் பார்க்க ...வண்டும். எழுத்துச் சீர்திருத்தம் தேவையில்லை ...ன்பது நமது கருத்தன்று. எழுத்துக்காகப் போரா...க் கொண்டு, மொழியை விட்டு விடக்கூடாது ...ன்பதே நம் கருத்தாகும். இப்பொழுது தமிழ் ...எழுத்துகள் இருக்கின்றன; ஆனால் மொழி இல்லை.

அடுத்து, அரசியல் கருத்துகள், அரசிய நிலையில் தமிழன்வேறு வேறு கட்சியாகப் பிரிந்து செயல்படுவது அவன் இனமுன்னேற்றத்திற்குப் பெரிதும் தடையாக உள்ளதை ஒவ்வொருவரும் நன்றாக, நடுநிலையுடன் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். தேர்தல் காலத்தில் மட்டுமே பயன்படக்கூடிய கட்சி வேறுபாடுகளைக் காலமுழுதும் கட்டியழுதுகொண்டு, நாம் ஒருவருக்கொருவர் போராடி, நம்மையே அழித்துக்கொள்வதால், தமிழினத்தை அதன் ஒற்றுமை உணர்வைச் சிதைத்துத் தேசிய வெள்ளத்தில் அழுத்தி அதன் உயிர்த் துடிப்பையே சாகடிக்க நினைக்கும் எதிரிகளுக்குத்தான் ஊதியமாகப் போகிறது. எனவே கட்சி வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாமல் இனமுன்னேற்றத்தையே முதன்மையாகக்கருதும்மனவுணர்வை நாம் ஒவ்வொருவரும் பெறுதல் வேண்டும். கட்சியா, இனமா என்னும் போராட்டம் நிகழும் இடத்தில், "இனநலத்திற்காகக் கட்சி நலன்களை இருபுறத்தும் மறந்து, அல்லது விட்டுக் கொடுத்துச் செயல்படும் போக்கை நாம் கைக் கொள்ளுதல் வேண்டும். இந்த வகையில் உ.த.மு.க. வில் அமைச்சர் காளிமுத்தினதும், தி.மு.க.வில் பொதுச் செயலாளர் அன்பழகனதும் உணர்வுகள் மதிக்கப்படவும் பின்பற்றப்படவும் வேண்டியனவாக எடுத்துக்கொள்வது நல்லது.

அடுத்து, உலகெங்கும் அமெரிக்கப் பண்பாடுகளே பெரிதும் பரவி, மக்களின் மனச் செழுமையை அழித்து வருவது, தமிழினத்திற்கு மட்டுமன்றி, மக்கள் அமைப்புக்கே ஒரு பெருங்கேடாக இருப்பது மிகவும் வருந்தத் தக்கதாக உள்ளது. உலகில் தோன்றிய அனைத்து மாந்த இனங்களிலும் தமிழினத்தின் பண்பாடே மக்களை மக்களாக மதிக்கத் தக்கதும், அவர்களை மேலும் மேலும் மிமிசை மாந்த நிலைக்கு உயர்த்துவதுமாகும் என்பதை உலகின் நல்லறிவாளர் ஒருமுகமாகச் சொல்வதை நாம் உணர்தல் வேண்டும். திருக்குறளைப் பற்றிக் கூற வந்த பெருமகனார் ஆல்பிரட் சுவைட்சர் 'நீண்ட நெடுங்காலமாகப் பண்பாட்டில் மிக உயர்ந்திருந்த மக்களிடையில்தான், இத்தகைய சிறந்ததும் மக்களினத்திற்கே வழிகாட்டியாக அமைவதுமாகிய ஒரு நூலை இயற்றும் பேரறிவாளர் ஒருவர் பிறக்க முடியும்' என்பதாகக் கூறிப் போந்தார். அவர் கூற்றை எண்ணிப் பார்த்தால், தமிழ்ப் பண்பாடு எவ்வளவு உயர்ந்தது என்பது விளங்கும். ஆனால், அந்தோ, நம் தமிழின மக்கள் இக்கால், மிகக் கவர்ச்சியானதும், மிகக் கொடிய மனநிலைகளை உருவாக்கி, வாழ்வமைதியையே சிதைப்பதுமான மேலைய நாட்டின் — குறிப்பாக அமெரிக்காவின் — கீழ்மை நிலை நாகரிகத்தில் மூழ்கி, மூச்சு முட்டி அழிந்துகொண்டிருப்பதைத் தமிழ் நலம் கருதும், தமிழின முன்னேற்றத்தை விரும்பும் ஒவ்வொருவரும் தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும்.

அறிவியல் வேறு; வாழ்வியல் வேறு. ஒன்றுக்கு ஒன்று துணையாக வேண்டுமேயல்லாது ஒன்றையொன்று அழித்துவிடக் கூடாது. அறிவியல் முன்னேற்றமே வாழ்வியல் ஆகும் என்று சில புதுமை விரும்பிகள் தவறாகக் கருதிக் கொண்டிருப்பது பெரிதும் வருத்தத்தக்கதாகும். அதுபோலவே வாழ்வியல் என்றால் அறிவியல் கண்ணோட்டமே அற்ற மூட நம்பிக்கைகளின் மொத்தக் களஞ்சியமே என்று சில பழமை விரும்பிகளும் நினைத்துக்கொண்டிருப்பது பெரிதும் வெட்கப்படத்தக்கதாகும். இந்த இருவகை நிலைகளையும் வேறு பிரித்து நன்கு உணர்ந்து, ஒன்றால் ஒன்றை வளப்படுத்திக் கொள்வதும், ஒன்றால் ஒன்றை அழியவிடாமல் காப்பதும், இரு நிலைகளையும் நன்கு கற்ற அறிவாளிகளின் கடமையாகும். ஒன்று தவிர்ந்தாலும் மற்றதற்கு வளர்ச்சியின்மையும், ஒன்று மிகுந்தாலும் மற்றதற்குத் தளர்ச்சி யுண்மையும் கருதிப் பார்க்க வேண்டிய ஒன்று. எனவே, தமிழர்கள் தங்கள் முன்னேற்றத்தில் அறிவியல் விழிப்பும் வாழ்வியல் செழிப்பும் உடைய உயர்ந்த மனப்போக்கைக் கொண்டவர்களாக விளங்குதல் வேண்டும். பழைமை பழமும், புதுமை காயும் என்றெண்ணுகின்ற மெத்தன மனப்போக்கும், புதுமை அழகும் பழைமை அழுகலும் என்றெண்ணுகின்ற விரைவேக மனப்போக்கும் ஆகிய இரண்டுமே தவிர்க்கத் தக்கன. பழைமை எல்லாமே தள்ளத்தக்கன அல்ல; புதுமை அனைத்துமே கொள்ளத்தக்கனவும் அல்ல. பண்பிலும் நட்பிலும் பழைமையும், அன்பிலும் அறிவிலும் புதுமையும் இனிப்பன போல், வாழ்வியலில் பட்டறிந்த பழைமையும், அறிவியலில் கற்றறிந்த புதுமையும் கைக் கொள்ளவும் கடைப்பிடிக்கவும் தக்கனவே! எனவே இவ்வகையிலும் தமிழர்கள் தங்கள் இன முன்னேற்றத்திற்கு எக் கொள்கை ஒத்ததென்று கண்டு, அதைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

இறுதியாக, தமிழினத்தைப் பிளவுபடுத்துகிற எந்தக்கொள்கைக்கும், தமிழர்கள் ஆதரவுதரக்கூடாது. எந்தத் தனிப்பட்ட கட்சிக் கொள்கையை விடவும் இன மானக்கொள்கையே பெரிது என்னும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அதேபோல் தனிப்பட்ட ஒருவரின் நெகிழ்ச்சிகளையும் குற்றங்களையுமே எண்ணி அவரால் இனத்துக்குக் கிடைக்கும் பெரும் பயனை இழந்துவிடும் அறியாமையையும் தவிர்த்தல் வேண்டும். 'உமிமலையில் ஓர் அரிசி கண்டாலும், அதையெடுத்து உவந்து போற்றும் மனநிலை' தமிழின முன்னேற்றத்திற்கு மிக மிக மிக இன்றியமையாதது. ஆரியம் மிக மிகச் சிறியதோர் இனமாக இருந்தும், இன்றும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும் வளர்த்துக் கொள்ளவும் செய்கின்றதெனில், அஃது இந்த மனப்போக்கால்தான். ஒரு பெரிய பலாப்பழத்தில் அழுகிய பகுதியை அறுத்து நீக்கிவிட்டு நல்ல பகுதியை உண்பது போலும் மனநிலை இன நல வளர்ச்சிக்கு மிகவும் தேவையானதென்று கருதிக் கொள்ள வேண்டும். இனி, எந்த அரசியல், பொருளியல் ஊதியத்திற்காகவும் இனமானத்தை இழந்துவிடவே கூடாது. இவ்வனைத்து நிலைகளையும் ஒட்டுமொத்தமாக எண்ணிப் பார்த்துத் தமிழினம் தன்னைக் காத்துக் கொள்ளவில்லையானால், இன்றுள்ள அகப்புறத்தாக்கங்களால், அடுத்த நூற்றாண்டிற்குள் அஃது அழிந்துபோவது பனிமலை போன்ற உறுதி என்று இறுதியாய் எண்ணிக்கொள்க.

பெருஞ்சித்திரனார்.

இப்படி இருக்கின்ற தமிழர்(!)களிடத்தில்தான் இந்தத் தூய தமிழ்ப்பணியையும் செய்யவேண்டியிருக்கிறது! என்ன செய்வது?

(அண்மையில் அன்பர் ஒருவர் (தமிழ்ப் பண்பு கருதி அவர் பெயரும், அம்மடலில் அவர் குறித்த வேறு இருவர் பெயர்களும் வெளியிடப் பெறவில்லை.) 'தமிழ்நிலம்' தமக்குக் காலந்தாழ்ந்து கிடைப்பதாக ஒரு மடலை எழுதியிருந்தார். அவர் அவ்வாறு எழுதியதில் தவறில்லை. ஆனால் அவர் எழுதிய முறையிருக்கிறதே, அதில், எவ்வளவு பண்பாட்டுக் குறைவும், உள்ளக் கொதிப்பும், குற்றஞ்சாட்டும் இயல்பும், பொறுமையின்மையும், புறங்கூறும் தன்மையும் பொருள் நசையும் உள்ளன என்றுதான் வருந்த வேண்டியிருக்கிறது! நம் தமிழர்களிடம் இத்தகைய தன்னழிவு மனநிலை உள்ளவரை, நம் இனம் எவ்வாறு மேம்படும்? மேம்படுத்த விரும்பும் ஓரிருவரையும் பலவாறான இழிப்புக்கும் பழிப்புக்கும் ஆளாக்கி, அவர்கள் முதுகில் குத்திப் பின்னடையச் செய்துவிடுகின்றார்களே! உண்மை என்ன என்பதையே இத்தகைய இளைஞர்கள் எண்ணிப் பார்க்க மறுக்கின்றார்கள்.

'உமிமலையில் ஓர் அரிசி கண்டாலும், அதையெடுத்து உவந்து போற்றும்' மனநிலை நமக்கு வளர வேண்டும். அதுதான் ஓர் இனத்தை முன்னேற்றும் முதல் படிநிலையாகும். பார்ப்பனீயம் நூற்றுக்கு மூன்று பேராகவுள்ள ஓர் இனமாகவும் நாம் தொண்ணூற்றேழு பேராகவுமுள்ள ஓர் இனமாகவும் இருந்தும், அவர்கள் முன்னேறி நிற்பதற்கும், நாம் பின்னடைந்து அழிவதற்கும் இதுபோலும் உள்ளரிப்பு நிலைகளும், தன்னழிப்பு உணர்வுகளுமே கரணியங்களாகும் என்பதை அன்பர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இங்கு அன்பர் மடலுடன், நம் விடையும் வெளியிடப் பெற்றிருக்கிறது. இந்த அன்பர் போல் வேறு சிலர்க்கும் இவ்வுள்ள எழுச்சியும், சூழலும் தோன்றலாம். அவர்களுக்கும் இதுவே விடையாக அமையும் என்று கருதுகின்றோம்.)

அன்பர் மடல்!

மதிப்பிற்குரியீர், வணக்கம். தமிழ்நிலம் கிழமை இதழ் துவங்கியவுடன் நான் ரூ 36/-ஐ உறுப்பினர் கட்டணமாகத் தங்கட்கு அனுப்பி வைத்தேன். கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டு எதுவும் எனக்கு இன்னும் வந்து சேரவில்லை. இதழ்கள் வந்து கொண்டிருந்தன.

17-4-83 தேதியிட்ட இதழுக்குப்பிறகு திடீரென இதழ் வருவது நின்று போயிற்று. காரணியம் விளங்காமல் அஞ்சல் அட்டை எழுதித் தங்களிடம் விளக்கம் கோரினேன். விடையில்லை.

மாறாக 1-5-83 தேதியிட்ட இதழ் 12-5-83 அன்று என் இல்லத்திற்கு வந்து சேர்ந்தது. (17-4-83 க்குப் பின்னால் 1-5-83 இதழ்தான் வெளியிடப் பெற்றுள்ளது.) 17-4-க்குப் பிறகு 1-5- தேதியிட்ட இதழ்தான் வந்துள்ளது. இடையில் ஒரு கிழமை இதழை ஏன் அனுப்பவில்லை? விளக்கம் தேவை. 1-5- தேதியிட்ட இதழ் 12-5-83 அன்றுதான் கிடைக்கப் பெற்றேன். கரணியம் என்ன? விளக்கம் தேவை. 1-5-83 தேதியிட்ட இதழுக்குப் பிறகு 'தமிழ்நிலம்'- வரவே இல்லை.

ஏன் வரவில்லை? விளக்கம் தேவை. (அதற்குப் பின் 22-5-83 ஆம் நாள் அனுப்பப் பெற்றுள்ளது.)

தனித்தமிழின் பெயரால் பலர் காசு சேர்த்து நலமாக வாழ்ந்து வருகின்றனர். அந்தக் கூட்டத்தில் தாங்களும் ஒருவரே. சில மூடத் தமிழ் அன்பர்கள் தங்களுடைய உண்மை உருவத்தை உணர்ந்து கொள்வாமல் தங்கள் பின்னால் வந்து கொண்டிருக்கின்றனர், போகட்டும்.

காசு சேர்க்கவும் விளம்பரம், புகழ் — இவற்றை விரும்பியும் தாங்கள் தனித்தமிழ் இயக்கத்தை நடத்தி வருகிறீர்கள் என்பதை நான் நன்குஅறிவேன். ' ....னும், ...வும் தங்களுடைய உண்மையான உருவத்தைச் சில ஆண்டுகட்கு முன்பே அறிந்திருந்தனர்.

'தாங்கள் பண ஆசையும் வெறியும் பிடித்தவர்' என்று ......அவர்கள் சில ஆண்டுகட்கு முன்பே குறிப்பிட்டார்கள். அப்போது அந்த உண்மையை என்னால் ஒப்புக்கொள்ள இயலவில்லை. மூக்கிற் கரியராகிய தாங்கள் வெளிப்பட்டாகத் தனித்தமிழ், தனித் தமிழ்நாடு—என்று சம்பாதிப்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. என்னுடைய பணம் ரூ 36/- இல் மிச்சத் தொகையைக் கணக்குப் பார்த்துத் திருப்பி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வண்ணம்,

— ஒப்பம். (காரைக்குடி)

இந்த மடலுக்கு விடுத்த விடை மடல்!

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சே!

வணக்கம். திங்கள் 18-ஆம் பக்கல் மடல் கிடைத்தது. தாங்கள் ஆய்ந்து பாராமல் எழுதிய வசை மொழிகளுக்கு நன்றி. அவற்றுக்கு விளக்கம் வருமாறு.

1. பொதுவாக உறுப்பினர் கட்டணம் பெறுவதற்குப் பணவிடைக் கைச்சாத்தே போதுமானதால் பற்றுமுறி அனுப்புவதில்லை. கல்வி நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் முதலியன தேவையெனில் விடுத்து வைக்கின்றோம்.

2. 'தமிழ்நிலம்' காலந்தாழ்ந்து வருவது பற்றிய அறிக்கை அவ்வப்பொழுது இதழிலேயே வருகிறது. அதைப் பார்த்திருந்தால் உங்களுக்கு இந்த ஐயம் ஏற்பட்டிருக்க வழியில்லை. அறிக்கை அனைவருக்குமே விளக்கம் தருவதால் தனித்தனியே மடல் எழுதுதல் தேவையானதாகக் கருதவில்லை.

3. இப்பொழுதுள்ள மின் தட்டுப்பாட்டாலும், வேறு பல வகையான இடர்ப்பாடுகளாலும் இதழ் விடுப்பதில் பெரிதும் காலத் தாழ்த்தமே ஏற்படுகின்றது. ஆனால் கட்டிய பணத்திற்குப் போதுமான இதழ்கள் கட்டாயம் விடுக்கப்பெறும். உங்களுக்கு நம்பிக்கை இல்லையானால் உறுப்பினர் கட்டணம் அனுப்பியிருக்கவேண்டுவதில்லையே! உங்களை நாங்கள் அணுகிக் கேட்கவில்லையே! அல்லது சட்டைப்பையிலிருந்தே பணத்தை நாங்களே பறிக்கவில்லையே, தம்பி!

4. 1-5-83 நாளிட்ட இதழ் குறிப்பிட்ட நாளில் விடுக்கப்பெற்றிருப்பினும், காலந்தாழ்ந்து கிடைத்தது. அஞ்சல் துறையால் நேர்கின்ற தவறு நாங்கள் என் செயவது?

5. இதுவரை நீங்கள் பெற்றுள்ள இதழ் எண்களைப் பார்த்து, எந்த எண் இதழ் கிடைக்கவில்லை என்று எழுதினால் அதை அனுப்புகிறோம். இல்லெனில் பணத்தைத் திருப்பி அனுப்புகிறோம். அதற்காகப் பண்புக் குறைவாகப் பேசுவது நீங்கள் உங்கள் பணத்திற்குத்தரும் மதிப்பைவிடப்பண்புக்கும், பொதுத் தொண்டுக்கும் குறைவாகவே மதிப்புத் தருகிறீர்கள் என்பதையே தெரிவிக்கிறது.

6. 1-5-83க்குப் பிறகு தமிழ்நிலம் இந்தக் கிழமை இறுதியிலேயே விடுக்கப் பெறும். நிலை அப்படி! என்ன செய்வது?

7. தனித்தமிழின் பெயரால் காசுசேர்க்க உங்களைப் போலும் நீங்கள் குறிப்பிட்ட இருவர் போலும் உள்ள தமிழநாட்டில் எவ்வாறு நடக்கும்? உங்களைத் தவிர நீங்கள் குறிப்பிட்ட இருவரைத் தவிர, தென்மொழி, தமிழ்நிலத்தோடு தொடர்புள்ளவர்கள் அனைவரையும் மூடர் என்று கருதுகிறீர்கள்! இதைவிட அறியாமை வேறு இருக்கமுடியாது. உண்மை ஒரு நாள் வெளிப்படும்.

விளம்பரம், புகழ் இவற்றை விரும்புவதாகக் கூறுகிறீர்கள். என் 25 ஆண்டுக் காலத் தொண்டுக்குப் பின்னால் வரும் குற்றச்சாட்டு இது! தமிழினம் ஏன் முன்னேறவில்லை என்பதற்கு நீங்களும் உங்களுக்கு என் உண்மை உருவத்தை வெளிப்படுத்தியதாகக் கூறுவோர்களுமே காரணமாக இருக்கலாம். 'பண ஆசையும் வெறியும் பிடித்தவன்' நானாக இருந்தால் இன்றுள்ள நிலையில் உங்கள் இரண்டு(!) வழிகாட்டிகளைப் போல் அரசியல் சதுரங்கம் ஆடிக்கொண்டிருப்பேன்.' தம்பி! நல்லது! உங்கள் அன்புக்கு மகிழ்ச்சி.

இதுவரை, நீங்கள் குறிப்பிட்ட அந்தப் புறங்கூறும் இரண்டு நல்லவர்களும் இதுவரை தென்மொழிக்கும், தமிழ்நிலத்திற்கும் எவ்வளவு பொருளை இழந்திருக்கிறீர்கள் என்று கணக்குச் சொன்னால் நன்றியுடையவனாக இருப்பேன்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் பெறும்!"

சென்னை-5 }
19-5-83 } அன்புநிறை.

அகம் கரியார்

—தமிழவேள்—

3. சமற்கிருதக் கண் !

"தமிழ்நாடு கெட்டுப் போனதற்குக் காரணியம் ஒரு குழுகத்தினர் தமிழினும் பார்க்கச் சமற்கிருதமே தமக்குச் சொந்தமுடையது எனக் கருதி வருகின்ற மையே ஆகும். அக்கூட்டத்தினர் இன்று நேற்றுத் தோன்றியவர்கள் அல்லர். நக்கீரர் காலத்திலேயே இருந்தார்கள் என்று அறிகிறோம். "ஆரியம் நன்று. தமிழ் தீது" என உரைத்த ஒருவனைச் சாகப் பாடினார் என்னும் பழங்கதை வழங்குகின்றது" என்று 'நமது மொழி' என்னும் நூலில ந. சி. கந்தையாப்பிள்ளை அவர்கள் எழுதுகிறார்கள்.

"அவர்கள் தேவையின் பொருட்டே தமிழைப் பயன்படுத்துகின்றனர். அஃதாவது ஆங்கிலத்தைக் கற்றுக கொள்வதைப் போல. மற்றபடி அவர்கள் சொந்த மொழியாகக் கருதுவது சமற்கிருதத்தையே! தமிழை விடச் சமற்கிருதம் மேல் என்பதே அவர்களின் முடிந்த முடிபாகும்" என்று நயனமைக் கட்சித் தலைவர் வயவர். அ. தி பன்னீர் செல்வம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்

இன்றும் தமிழ்நாட்டுக் கோயில்களில் சமற்கிருத வழிபாடு தான் நடைபெறுகிறது. தமிழர்களுடைய சமயச் சடங்குகள் அனைத்திலும் சமற்கிருத மந்திரங்கள் தாம்—உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக் கொள்பவர்களால் ஓதப்படுகின்றன. தமிழினும் சமற்கிருதமே உயர்ந்த மொழி—முன்னே தோன்றிய மொழி என்று அவர்கள் சொல்லிக் கொண்டுதான் வருகிறார்கள்.

"இந்து தர்மங்கள்" என்னும் நூலில் சமற்கிருதத்தைப் பற்றிக் கூறியுள்ள கருத்துகளைப் பாருங்கள்; "பாசைகளில் சமற்கிருத பாசை உலகம் தோன்றிய காலம் முதல் இருந்து வருவது! சமற்கிருத பாசையின் தொடர்பு இல்லாத ஒரு பாசையும் கிடையாது! 'உற்பத்தி' இல்லாத 'ஆரம்பம்' இல்லாத 'அனாதியாய்' வந்து கொண்டிருக்கும் ஒரு பாசை சமற்கிருத பாசை! தெய்வத்தன்மை வாய்ந்த சமற்கிருத பாசை தெய்வம் போலவே 'அனாதியாய்' வந்து கொண்டிருக்கிறது 'சமற்கிருதம்' என்ற சொல்லுக்கு இலக்கண இலக்கியங்களால 'சுத்தமானது' என்று பொருள்!"

பாரதியார் தமிழ்ப்பற்று உடையவர் என்று கூறப்படுபவர், தமிழைச் சிறப்பித்துப் பாடியிருப்பவர் என்று போற்றப்படுபவர். என்றாலும் அவர் தம உள்ளத்தில் தமிழினும் சமற்கிருதமே உயர்ந்தது என்ற எண்ணம் குடிகொண்டிருந்தது என்னும் உண்மையைத் தமிழர்கள் பலர் அறியமாட்டார்கள்.

"ஆதிசிவன் பெற்று விட்டான் என்னை..." என்று தொடங்கும் அவருடைய பாடலைப் பார்த்தால் தான் இந்த உண்மை நன்கு விளங்கும். தமிழ்த்தாய் சொல்கிறாளாம்! "ஆதிசிவன் என்னைப் பெற்றெடுத்தான். ஆரிய மைந்தனாகிய அகத்தியன் என்னும் வேதியன் என்னைக் கண்டு மகிழ்ந்து நிறைவுடைய இலக்கணத்தை எனக்குச் செய்து கொடுத்தான். உலகிலேயே உயர்ந்த மொழியாகிய ஆரியத்திற்கு நிகராக நான் வாழ்ந்து வந்தேன்."

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!" என்று பாப்பாப் பாட்டில் பாடிவர்தான் பாரதியார். என்றாலும் ஆரியமொழி தான் உயர்ந்தது என்று ஒப்புக் கொண்டு அதற்கு நிகராகத் தான் வாழ்ந்தது போலவும், தமிழ் தோன்றுவதற்கு முன்னே வடமொழி இருந்தது போலவும், ஆரிய மைந்தன் என்னும் அகத்தியன் தான் தமிழுக்கு இலக்கணம் செய்து கொடுத்தது போலவும் தமிழ்த் தாயே கூறுவதாகப் பாடியிருப்பது எவ்வளவு பெரிய பொய்!

பாரதியார் தான் இன்று இல்லையே! இப்போது அப்படி வடமொழியை போற்றுவர்கள் இருக்கிறார்களா?" என்று சிலர் கேட்பார்கள். ஏன் இல்லாமல்? திருப்பாவை திருவெம்பாவை மாநாடு கூட்டுபவர்கள் அத்தகையவர்கள் தாம்! காஞ்சிப் பெரியவர் என்பவர் அத்தகையவர் தாம!

திருப்பாவை திருவெம்பாவை என்பன தமிழ்ப் பாடல்கள் தாமே? அவை வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவையல்லவே! என்றாலும் திருப்பாவை திருவெம்பாவை மாநாட்டில் போடப்படும் தீர்மானம் என்ன தெரியுமா?

"எல்லா மாநிலங்களிலும் பள்ளிக்கூடங்களின் பாட திட்டத்தில் ஆங்கிலமொழி, மாநிலமொழி ஆகியவற்றுடன் சமற்கிருதத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும. நமது புராதன கலாசாரத்தை மாணவன் அறிந்து கொள்ள இது நன்கு உதவும்" என்பது

திருப்பாவைக்கும் திருவெம்பாவைக்கும் சமற்கிருத மொழிப் படிப்புக்கும் என்ன தொடர்போ? தமிழர்கள் இதனை எண்ணப் பார்க்க வேண்டாமா?

"சமற்கிருதத்தில் பாரதியார் கவிதை" என்னும் நூலை சில மாதங்களுக்கு முன் வெளியிட்டுப் பேசிய காஞ்சிப் பெரியவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

"தமிழும் சமற்கிருதமும் இரு கண்கள் போன்றவை, தமிழ்மொழி தாய் மொழி என்றால் சமற்கிருதம தந்தை மொழியாகும் சமற்கிருதத்தில் உள்ள அனைத்துக் கருத்துகளும தமிழ் மொழியில் இருப்பதோடு, அதைவிட மேலும் கருத்துகள் உள்ள ஒரு மொழியாக அது திகழ்கிறது!" என்று சொல்லி இருக்கிறார்.

தமிழும் சமற்கிருதமும் இரு கண்கள்! ஆனால் ஒரு கண்ணைவிட மற்றொன்றில் ஒளிமிகுதி என்கிறார். அந்த ஒளி மிகுந்த கண் போன்றது சமற்கிருதமாம்!

"ஒரு காலத்தில் அவர்கள் சமற்கிருத்தை விரும்பி தமிழுக்கு இழுக்குத் தேடி விட்டனர். அந்தக் காலம் மாறி விட்டது என்று சொல்பவர் இதனைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். காலம் எங்கே— மாறிவிட்டது?

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வறுமைக் கோட்டின் கீழ் வாடிச் செத்துக் கொண்டிருக்கும் மக்களுக்குச் சல்லிக் காசுக்கும பயனற்றவை. மற்ற உலக வைப்பகக் கடனும், பன்னாட்டுப் பணக் குவையக் கடனும் பல நாடுகளை முன்பே அடிமையாக்கி, ஏழைகளை மேலும் ஏழையாக்கி விட்டன. நாட்டின் பெரிய பண முதலைகளுக்காகவே நடந்துவரும அரசுகளை வாழ வழிகளற்றுக் குற்றுயிராய்க் கிடக்கும் மக்கள் உயிர்களைப் பற்றியோ அவர்களின் போராட்டங்களைப் பற்றியோ எங்கே பேசப் போகின்றன?

ஒரே ஒரு கேள்வி.

ஏழாவது கூட்டுச் சேரா மாநாட்டிற்குப்பின் உலக அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்ன?

- ஒன்றுமில்லை. இந்தக் கூட்டுச் சேரா நாடுகளுக்குள் அடுத்த மாநாடு எங்கே நடத்துவது என்ற தீர்மானம் எடுக்கக்கூட முடியாமல் சண்டை போட்டுக் கொண்டனர்
- உறுப்பு நாடுகளான இரான்-இராக் போர் நிறுத்தம் குறித்து ஓர் உடன்பாடும ஏற்படவில்லை.
- உறுப்பு நாடுகளுள் "கம்பூச்சியாவின் சின ஆதரவு அரசும உருசிய ஆதரவு அரசும ஏற்புக் கோருகின்றன. இவற்றில் எந்த அரசினை ஆதரிப்பது என்ற சிக்கலை மாநாட்டின் இரண்டு நாட்களை வீணடித்தார்கள், இந்திரா உருசிய ஆதரவாளர் மட்டுமல்லாமல் அயல் நாட்டு நடவடிக்கைகளில் உருசியாவின் கட்டளைகளுக்கேற்ப நடப்பவர் என்பது வெளிப்படையாகத் தெரிந்த செய்தி எனவே இந்திரா பதவிக்கு வந்த உடனே பரபரப்புடன் உருசிய ஆதரவாளரான இகெங்சாமரின் தலைமையிலான அரசுக்கு ஏற்பு அளித்து விட்டது

அமெரிக்கா கூட்டுச் சேரா மாநாட்டின் நடவடிக்கைகளைத் திசை திருப்ப அடிக்க வேண்டும என்ற ஒரே நோக்கத்தோடு கம்பூச்சியாவுக்கு இடம் ஒதுக்கலது என்ற புலனத்தையே தன் ஆதரவு நாடுகளான, தென் கிழக்காசிய நாடுகள் மூலம குழப்பத்தை உண்டு பண்ணியது இந்துமாக் கடலில் படைத்தளங்கள் அமைப்பதில் மும்முரமாகச் செயல்பட்டு வரும் அமெரிக்கா இந்த மாநாட்டின் தீர்மானங்களைக் குறித்துப் பொருட்படுத்தவில்லை. மாறாக 'டிகோ கார்சியா' தீவிலிருந்து வெளியேற்றப் பட்ட பழங்குடி மக்கள் எதிர்க்கப்பட்டு பிலப்பைன்சு நாட்டுக் கடல் பகுதியிலேயே, குடியேற விடாமல் பல நாட்கள் தவிக்கவிடப் பட்டனர்.

நிக்கராகுவாவில் உருசியப் பொதுவுடைமையரின் மேலீடு பரவியுள்ளதாக அமெரிக்கா, அதன் அண்டை நாடுகளைத் தூண்டி ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிகள் இன்னும் எடுத்து வருகிறது. உள்ளே உருசியாவின் தொல்லை; வெளியே அமெரிக்காவின் தாக்குதல். வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் மூன்றும உலக நாடுகளை வல்லரசுகள் விளையாட்டுப் பொம்மைகளாக்கிப் பார்க்கின்றன.

உருசியா கைப்படுத்தியுள்ள, அதன் பேராளர் ஆட்சி நடத்தி வரும் ஆப்கானிகதான் சிக்கலும் ஒரு விளைவுமில்லை மாறாக ஆப்கானிகதானின் இளைஞர்களும், மாணவர்களும் வலுக்கட்டாயமாக உருசியா கொண்டு செல்லப் படுகிறார்கள். அங்கு அவர்களுக்கு உருசியக் கொள்கை கொள்கைகளைப் புகட்டும கட்டாயப் பயிற்சி வகுப்புகள் தொடர்கின்றன அதை எதிர்ப்பவர்கள் ஆப்கானிகதானில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும பல்வேறு நாட்டு உருசிய ஆதரவுப் படைகளால் கொல்லப்பட்டு வருகிறார்கள். இந்தியாவின அண்டை நாடான ஆப்கானின் சிக்கலை இந்திரா பெரிதாக எண்ணவில்லை. மாறாக, அமெரிக்க இதழ்களுக்கு அளிக்கும் பேட்டியில் கூட மிகக் கவனத்தோடு உருசியாவிற்கு எதிர்ப்பில்லாமல் கருத்துத் தெரிவிக்கிறார்.

இப்போது அடிமைப்படுத்தப்பட்ட ஆப்கானிகதானின் எல்லையோரத்திலிருந்து விடுதலைப் படையினரின் கொரில்லாத் தாக்குதல்களைச் சமாளிக்க அதிகப் படையை நிறுத்துவதோடில்லாமல், சொமனியைத் தூண்டுபோட்டுக் கொள்வ எழுப்பிய பெரியின் மதிற்சுவர் போல் ஆப்கானிகதானிலும் மதில ஒன்று எழுப்பி வருகிறார்கள் ஆப்கானிலிருந்து வெளியேறும் ஏதிலிகள் பாகிகதானில் குடியேறுகிறார்கள். இது பாகிகதானுக்கு ஒரு தொல்லையாக மட்டுமல்லாமல் உருசியாவின் கைப்பற்றல் அச்சவுணர்வையும் ஏற்படுத்தி அமெரிக்காவிடமிருந்து அதிக அளவு போர்க்கருவிகளைப் பெறுவதற்கு ஏந்தாகவும் ஆகிவிட்டது. 'கரகோரம்' பாதையை உருவாக்கிச் சீனவுடன் போக்குவரத்துத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள பாகித்தான், இந்திய உருசிய உறவுக்கு ஓர் அறைகூவலாகவே உள்ளது. இவ்வாறு பொருளியலிலும படை வலிமையிலும் பின் தங்கிய நாடுகள் வல்லரசுகளைத் தங்கள் சிக்கல்களுக்குத் துணையாக வைத்துக் கொள்வதின் மூலம் நாளடைவில் அவற்றின் பகடைக் காய்களாகி வருவதையும் வரலாறு உணர்த்தினாலும், இந்த நாடுகள் உணரவில்லை.

எண்ணெய் விலையைக் குறைக்க வேண்டும் என்று அரபு நாடுகளிடம் கூட்டுச் சேரா மாநாடு கேட்டுக் கொண்டன இந்த எண்ணெய் வளநாடுகள் கண்ணெய் முதலிய எண்ணெய் விலையைக் குறைப்பதாகச் சொன்னாலும் அதனால் ஆதாய மடையப் போவது அதிக அளவில் வாங்கும் பணக்கார நாடுகள் தாம். இந்த முன்னேற்றமடைந்த நாடுகளுக்காகத்தான் இந்தக் கூட்டுச் சேரா மாநாடு தில்லியில் பேரம் நடத்தியது.

தில்லியில் நடந்த இந்த ஏழாவது மாநாட்டிற்கும் இதற்குமுன் கியூபாவின் இகவானாவில் 1979-இல் நடந்த மாநாட்டிற்கும் உள்ள வேறுபாடு, ஆறுவது மாநாட்டின் தலைவர் 'பிடல் காசுட்ரோ'வின் உருசிய ஆதரவு அமெரிக்க எதிர்ப்புணர்வும் கூட்டுச் சேரா நாடுகளின் இயக்கத்தையே ஒரு சார்புடையதாக்கிக் காட்டியது, கூட்டுச் சேரா நாடுகளைக் கூட்டுடைமை நாடுகளின் நட்புப் பாகம் என்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என பிடல் காசுட்ரோ கோரினர். ஆனால் அத்தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

இத்தகையதொரு தீர்மான முயற்சியை உணர்ந்திருந்த அமெரிக்கா இந்த மாநாட்டிற்குத் தனது ஆதரவு நாடுகளை அணியப்படுத்தி அனுப்பியது மாநாடு தொடங்கு முன்பே இந்திராவுக்கு மாநாடு வெற்றி பெற வாழ்த்துகள் அனுப்பியது. மாநாட்டில் நியூட்ரான் கருவிகளைத் தடை செய்ய வேண்டும என்ற கோரிக்கையை அமெரிக்கா பொருட்படுத்தாமல் விட்டுவிட்டது. கூட்டுச் சேரா நாடுகளைப் பற்றி ஏராளமாக 'இரப்பாளர் நாடுகள்' என்று தான் அமெரிக்காவின் "வாசிங்டன் போசுட்" பகடி செய்துள்ளது.

இந்த மாநாட்டில் கருத்து வேற்றுமைகளாலும் வல்லரசுகளையே சார்ந்திருக்கும் தன்மையினாலும், உறுப்பு நாடுகளின் சிக்கல்களைக் கூடத் தீர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை. வியத்நாமில் சீன, உருசிய மேலீட்டைப் பற்றி யாரும் அதிகக் கவலைப்படவில்லை. இவ்வாறு வல்லரசுகளின் மேலீட்டு அரசியலை ஒருமித்து எதிர்க்கத் திறனில்லாமல் கடமைக்காக நடந்த பயனற்ற மாநாடு இது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

(நன்றி. தென்மறை, ஏப்ரல், 1983)

இன்றையத் தமிழகத் தாளிகைகளின் நோக்கும் போக்கும் !

இது, 16-11-80-இல் பல்லடம் திருக்குறள் மன்றம் 'இன்றையத் தமிழகத் தாளிகைகளின் நோக்கும் போக்கும்' என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கின் செய்திச் சுருக்கம். — காலங் கருதி இக்கால் வெளியிடப் பெறுகிறது.)

மன்றச் செயலர் வரவேற்புரைக்குப் பின், தலைமையேற்ற திரு ப. வைரவசாமி, தம் முன்னுரையில், இது போன்ற கருத்தரங்கங்கள் பத்தாண்டுகளுக்கு முன் தாம் கேரளத்தில் பணியாற்றிய காலத்தில் மிகப் பரவலாக அங்கு நடத்தப் பெற்று வந்தமை அறிந்தேன். தமிழகத்தில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் எங்கோ அருகியே காணப்படுகின்றன.

ஒருமுறை வாசுதேவன் நாயர் எழுதிய புதினம் ஒன்றில் அவர் எத்தனை புதிய சொல்லாக்கங்களைப் படைத்திருக்கிறார் என்பன போன்ற ஆய்வுகள் நடைபெற்றன. ஆனால் தமிழகத்தில் இது போன்ற ஆக்க வேலைகள் நடைபெறுமைக்கு காரணம தமிழினத்தின் நலத்தை விரும்பாத சிலர் வயம் தாளிகை உலகம் சிக்கிக் கிடப்பதால் அவை தமிழர்களின் உண்மையான கருத்துகளை எதிரொளிப்பதாக இல்லை. கேரளத்தின் சிறந்த நாளிதழ்களான 'மலையாள மனோரமா' 'மாத்ருபூமி' போன்றவை கேரள இனத்தவர்களின் கையில் இருப்பது கேரள மக்களின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகக் கருதுகிறேன். இங்குள்ள பொதுவுடைமை பேசும் தமிழர்கள் 'மொழி பற்றி ஆராய்வது குறுகிய நோக்கு அல்லது பிற்போக்கு' என்று தவறாகக் கருதுகின்றனர். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்'. ஒரே பொது நிலைச சமயம்' என்பன போன்ற கருத்துகளை வழங்கிய அறிஞர்கள், ஒன்றே மொழி எனக் கூற இயலா நிலைமை பற்றிச் சிந்திக்க வேண்டுமெனக் கூறினர்

அடுத்துப் பேசிய திரு. சு. தவமணி இன்றைய பல தமிழக நாளிதழ்கள் விற்பனை நோக்கிற்காகப் 'பாம்பு வேள்வி' போன்ற வேண்டாத செய்திகளைப் பெரிது படுத்துவம், கவர்ச்சிப் படங்கள், இழிதகைக் கதைகள் (ஆபாசம) முதலியவற்றை வெளியிட்டு வாழ்க்கையோடு தொடர்புடைய செய்திகளை மறைக்கின்றனவென்றும் இதனால் மக்கள் கவனமாக புலனங்களை (விஷயங்களைச்) சிந்திக்கும் ஆற்றலற்றவர்களாக ஆக்கப்படுகிறார்கள், என்றும இந்து ஓர் ஊதிய நோக்குக் குமுகாய மாதலால் இவ்விழிநிலை தொடர்கிறது என்றும் பெரும் பொருள் சிலரிடம் குவியும் வாய்ப்புள்ள தனி உடைமைக் குமுகாய அமைப்பைத் தகர்ப்பதே மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் பண்பாட்டு மேம்பாட்டுக்கும் வழிகோலும் எனவும் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய திரு. கி. சண்முகம, இன்றைய சில இழிதகை இதழ்கள் மாணவர்களைக் கவருவதற்காக ஏதோ சில நெறி விலக்கான நிகழ்ச்சிகளைக் கருவாகக் கொண்டு பெரும்பான்மையான கதைகளை வெளியிடுவதால் அவர்கள் உள்ளங்கள் பாழ்படுகின்றன. பள்ளியில் கொடுக்கப்படும் அறிவு சுவைப்பு ஊட்டுவதாகவும பயனற்றதாகவும் ஆகிவிடுகின்றன. சிறிதே கற்று ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாள இளைஞர் சிலரும் ஒருமுறை சுவை கண்ட இது போன்ற நூல்களால் மேலும் தொடர்ந்து மனநிலையைப் பாழடித்துக் கொள்ளுகின்றனர்.

பள்ளியிறுதி வகுப்புப் படித்த தாய்மார்கள் கூட தங்கள் குழந்தைகளுக்குச் சிறிதே முயன்றாலும் கற்றுத் தர இயலும் பாடங்களைப் படித்தறிய முயலாது, பெரும் செலவு செய்து ஆசிரியரிடம் தனிப் பாடம கேட்க ஏற்பாடு செய்து விட்டுத் தங்கள் ஓய்வு நேரத்தை குமுதம், குங்குமம போன்ற பயனற்ற வெற்றுப் பொழுதுபோக்குத் தாளிகைகளைப் படிப்பதனால பொருட்செலவும் மிகுந்து அறிவுப் பயனும் குன்றிப் போகின்றது. எனவே பெண்கள் கல்வியால் பெரும்பயன் ஏற்படும் நிலை தடைபட்டு வருகின்றது. படித்துத் தேறி அலுவலகத்தில் பணியாற்றுவோரின் நிலையும் இதனின்றும் பெரிதும் மாறுபட்டதாக இல்லாமையும் வருந்தத்தக்கது. **இன்றையத் தமிழகத் தாளிகைகளின் ஒரே நோக்கு பணம் பண்ணுதல். அவற்றின் ஒரே போக்கு மக்களை மயக்கி மடயர்களாக்குதல்.** இதனால் உண்மை அறிவு உணரப்படுவதும் மதிக்கப் பெறுவதும் எவ்வாறு? படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் சிந்தனையில்—பேச்சில்- நடத்தையில் பெரிதும் வேறுபாடில்லை என்று வருந்தி முடித்தார்.

அடுத்துப் பேசிய திரு. சு. ஆறுமுகம், தன் மொழியைப் பார்த்து 'தேன்மொழி' என்று படிக்கும் ஓர் அறிவு மழுக்க நிலையே படித்த மக்களிடையேயும் காணப்படுகின்றதென்றும் மக்களைப் பாலியல் கவர்ச்சியினின்றும் மீட்பதற்கு இதுபோன்று கருத்தரங்குகளைவிட வெளிப்படையான இயக்கங்கள் தொடங்கப் பெறலே பயனளிக்கும என்றார்.

அடுத்துப் பேசிய திரு. ப. இராமசாமி 'தமிழினத்திற்கு மாறான உணர்வுடையவர்கள் நடத்துகின்ற இதழாயினும், அதனை வாங்கும மக்கள் இருப்பதால் தான் அவை செழிக்கின்றன. எனவே மக்களுக்கு அறிவு கொளுத்தி மனமாற்றம் உண்டாக்குவது ஒன்றே சிறந்த வழி என்றார்.''

அடுத்துப் பேசிய திரு. சட்டநாதன், தமிழக இதழ்களில் பெரும்பான்மையானவை ஆரியர் கைகளில் உள்ளன. இருவேறு அரசியற் கொள்கை உடைய 'விகடன்' 'துக்ளக்' இரண்டும் ஒரே வெளியீட்டாளரால் வெளியிடப்படுவது—அஃதாவது அதன் ஊதியம ஒருவர்க்கே. இரண்டு கொள்கையைச் சொல்லி ஒருவர் வாழும் நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்ணின் போர்வையில் எழுதப் பெறும் இனக் கவர்ச்சி எழுத்துக்களை மேலும் போதையளிக்கும் என்றெழுதும பேடியர்களும் உள்ளனர். மக்கள் இதனை விரும்புகிறார்கள் என்பது பொய். இவர்கள் கொடுப்பதனால்தானே மக்கள் வாங்க நேரிடுகிறது. இவர்களே வாங்கத் தூண்டுகிறார்கள் என்பதே மெய். வெளியிடப் பெறும் ஒவ்வோர் இதழும் தமிழறிஞர் ஒருவரின் மேற்பார்வையில் வெளிவர வேண்டும் எனச் சட்டம் செய்யப்படுமாயின் சில மாதங்களில் இவ்விழிநிலை மாறும் என்பது உறுதி.

நம் இன நலம் பெரிது. தமிழினம அறிவெழுச்சி பெற்றாக வேண்டும். இனக் கவர்ச்சி இதழ்களை எரிக்கும் இளைஞர்களின் கூட்டத்தைத் திரட்ட வேண்டும். அது வரை ஊருக்கு ஊர் தமிழ் மக்களின் உண்மை உணர்வுகளை வெளிப்படுத்தும் கையெழுத்து ஏடுகளையாவது நடத்த வேண்டும என்கிறார்.

அடுத்துப் பேசிய திரு. ந முத்துக்குமரன், ஒவ்வோர் இதழின் குறிக்கோள் சொலவங்களை எடுத்துக் காட்டி அவ்விதழ்கள் அவற்றிற்கு முரணபட நடப்பதை தெளிவாக விளக்கினார். அரசு வெளியீடான ''தமிழரசில்'' கூட பஸ், லாட்ஜ், ஹோம், சீட் (இருக்கை); டீச்சர் அட்ரஸ் போன்ற தேவையற்ற கலப்புகள் இருப்பது வருந்தத் தக்கது. இலக்கியத்தில் இயல்பு உணர்ச்சி வேண்டுமாயின் கல்லாத கதை மாந்தரின் வாயில ஒரோவழிச் சில கலப்புச் சொற்கள் வருவது சிறப்பே. இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு பாவேந்தருடைய 'குடும்ப விளக்கு'... [உடை] 'கழைக்கூத் தாடியின் காதல்'. இன்றைய தாளிகைகள் இடைக்காலப் புராணங்களைப் போன்றே மக்களிடையே கற்பனைக் கதையுணர்ச்சிகளை மிகுதியாகப் பெருக்கி வருகின்றன. கழக இலக்கியங்களில் காணப்படும் உண்மை உணர்வு—வாழ்வியல் உணர்வு இடைக்காலப் புராணங்களில் திரிந்து போனமையை உள்ளவாறு காணும் போக்கு—ஆராய்ச்சி மனத்தைத் தவிர்த்துக் கற்பனை—கதை உணர்வில் மயங்கச் செய்யும் போக்கு இன எழுச்சியின் வேகத்தைத் தணிக்கும். எனவே இன நலம் பெரிது. அந்தப் பெறும் வாழ்வியற் கட்டுரைகளே நம் இனத்தை உயர்த்த வல்லன என்பதை உணரவேண்டும். என்றார்.

கொள்கை இதழ்கள் பல பொருள் வலிவின்மையால் வீழ்ந்துபட்டமையை உணர்ந்து மிக எச்சரிக்கையாகச் செயலபட வேண்டும எனவும் குறிப்பிட்டார்.

தலைவர் தம் முடிவுரையில் ''இதுகாறும் பேசிய பேச்சுகளில் தாளிகைத் துறையில் ஆரிய வல்லாண்மை தெற்றெனப் புலப்படுகிறது. மொழி உணர்வு மழுங்குவதால் அறிவுணர்வு மழுங்குகிறது. இதனைத் தமிழர்கள் நன்கு உணர வேண்டும். இதனை உழைக்கும் மக்களுக்கு உழைக்கும் பொதுவுடைமைக் கட்சிகள்—அமைப்புகள் நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும். அண்மையில் கேரளம் வந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தியை வரவேற்ற கேரள முதல்வர் நாயனார், ''நடுவணரசின் மொழிக் கொள்கை இப்படியே தொடருமானால் இந்தியா சிதறுண்டு போகும்'' என்று கூறுகின்ற தெளிவு—துணிவு தமிழகப் பொதுவுடைமையினர்க்கு இல்லாதிருப்பது வியப்பே. தமிழகத்திலுள்ள தொழிற் கழகங்கள் பொதுவுடைமை அமைப்புகளிலும் மொழியடிமைத்தனமே மேல் ஓங்கி நிற்பதாகத் தெரிகிறது,

எனவே இது போன்ற கருத்தரங்கங்களின் வாயிலாகவும், இதழ் எரிப்பியக்கத்தின் வாயிலாகவும் இனக் கவர்ச்சிப் போர்வையில் முதலாளியத்திற்குத் துணை போகும் ஆரியத்தின் போக்கினை மக்களுக்கு இனங் காட்ட வேண்டுவது நம் தலையாய கடமை என்று உணர்ந்து செயல்படுவோமாக'' என்று உணர்வுடன் கூறி முடித்தது குறிப்பிடத் தக்கது.

மன்றப் பொருளாளரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிந்தது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் தமிழ்ப்பணி இயக்கம்

புதுவை அரசுக்கு விடுக்கும் வேண்டுகோள் !

1. தமிழ் வளர்ச்சித் துறையை இவ்வாண்டாவது நிறுவுக.
2. கோயில்களில் கட்டாயத் தமிழ் வழிபாட்டைக்கொண்டு வருதல் வேண்டும்.
3. போக்குவரத்துச்சாலைப் பெயர்களைத் தமிழில் மாற்றுக
4. திரைப்பட அனுமதிச் சீட்டுகளைத் தமிழில் மாற்றக் கட்டளையிடுக.
5. தமிழ் படித்த இளைஞர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை தருக !
6. புதுச்சேரியில உள்ள தொழிற்பயிற்சி பள்ளியில் வானொலிப் பெட்டி. தொலைக் காட்சி. குளிர்பதனப் பெட்டி செப்பனிடுதல் போன்ற இன்றியமையாத தொழிற் பிரிவுகளை மேலும் உருவாக்குக.
7. தமிழ்மக்களை ஏமாற்றி வரும் வட்டிக்கடைக்காரர்களின் வட்டிச் சீட்டுகளைத் தமிழில் மாற்றக் கட்டளையிடுதல் வேண்டும். மேலும் அச்சீட்டுகளில் குறிக்கப்பட்டிருக்கும் நெறிமுறைகளை மீறும் வட்டிக்கடைக்காரர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்
8. அரசு சுற்றறிக்கைகளைத் தமிழில் மாற்றுக.

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்,
ஆண்டுக் கட்டணம் ரூ. 36/-
அரையாண்டுக் கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர் 'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.